01.08.2025
OS. No.111/2020
**வா.சா.1 –** திரு.ரெக்ஸ் ஆண்டனி ஜேம்ஸ், த/பெ.டெரி ஜே நாதன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :-**

எனக்கு ஆதார் அட்டை திருச்சி முகவரிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. பாஸ்போர்ட்டும் திருச்சி முகவரிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நான் படித்து முடித்தபிறகு சென்னைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எந்த வருடம் சென்றேன் என்றால் 2018 ம் வருடம் ஆகும். 2018 க்கு முன்பு திருச்சியில் தான் இருந்தேன். 2018 லிருந்து எனது தந்தையார் இறக்கும் வரையில் நான் சென்னையில் தங்கி ரெக்ஸ் பேஷசன்ஸ் என்ற கார்மென் ஷாப் நடத்தி வந்தேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் கத்தாரில் 1996 லிருந்து நான்கு வருடம் வேலை பார்த்தார். அந்த நான்கு வருடம் திருச்சியில் தான் வசித்தோம். எனது தாயார் வழி பாட்டி வீடு திருச்சி பாலக்கரையில் உள்ளது. தாவாச் சொத்தில் முதல் தளத்திலும், இரண்டாவது தளத்திலும் நானும், எனது தாயாரும் வசித்து வந்தோம். வழக்கிற்கு முன்பிருந்தே நாங்கள் கூட்டுக்குடும்பமாக தான் வசித்து வந்தோம். தாவாச் சொத்து மற்றும் மனை எண். 12, 13 சொத்துக்கள் ஆகியவற்றின் கிரைய பத்திரம் எனது பாட்டி பெயரில் தான் உள்ளது. மனை எண்.12 யை எனது பாட்டி 27.06.1976 ம் தேதியிட்டு தான செட்டில்மெண்ட் இந்த வழக்கின் வாதிக்கு எழுதிக்கொடுத்தார். அப்போது நான் பிறக்கவில்லை. 1976 ல் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் முதல் சாட்சியாக எனது அப்பா கையொப்பம் செய்திருக்கிறார்

என்றால் அதில் என் அப்பா கையொப்பம் இல்லை. 1976 ல் எனது அப்பா எப்படி கையொப்பம் செய்வார் என்று எனக்கு தெரியுமா என்றால் அப்போதிருந்து இப்போது வரை பாஸ்போர்டில் இருப்பது படி தான் கையொப்பம் செய்கிறார். தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் எனது தகப்பனார் பெயர் இருப்பது தெரிந்தும் நான் வழக்கிற்காக எனது தகப்பனார் கையொப்பம் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அத்தைக்கு 1976 ம் வருடம் எழுதிக் கொடுத்த தான செட்டில் பத்திரம் செல்லதக்கதில்லை என்று இதுவரை நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.9 என்பது என் பாட்டி தான் தரைத்தளத்தில் வசித்து வருவதை என் தகப்பனார் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்த வழக்கில் என் அப்பாவிற்கு எதிராக இடைக்கால உறுத்து கட்டளை வழங்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் இந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.9 ஆகிய வழக்கில் நான் தரப்பினர் கிடையாது. தரைத்தளத்தில் நாங்கள் வசித்து வருவதாக கூறுவது நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் செயல் என்று சொன்னால் நாங்கள் தான் இருந்து வருகிறோம். தரைத்தள பகுதி என் பாட்டி இறந்த பிறகு பூட்டி வைத்திருந்தோம். தற்போது அதில் எங்கள் அத்தை பூட்டை உடைத்து அனுபவித்து வருகிறார். தரைத்தள பகுதி ஆரம்ப கால முதல் எங்கள் பாட்டியின் அனுபவத்தில் தான் இருந்தது என்றும் அவர் இறப்பிற்குப் பிறகு இந்த வழக்கின் வாதியின் வசம் அனுபவம் இருந்து வருகிறது என்று சொன்னால் தவறு ஆகும். தரைத்தள

ApproV

பகுதியில் நானும், என் தகப்பனாரும் எந்த காலத்திலும் அனுபவம் இருந்தது கிடையாது என்றும், தரைதளப் பகுதியில் அனுபவத்தில் இருந்து வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. என் தகப்பனார் அசல் வழக்கு எண்.1017/2016 என்ற வழக்கினை வாதிக்கு எதிராக நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்து இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 அந்த வழக்கின் பிராது நகல் என்றால் சரிதான். அதில் உள்ளது என் அப்பாவின் கையொப்பம் ஆகும். வா.சா.ஆ.3 ல் முதல் தளத்தில் என் தகப்பனார் குடியிருப்பதாகவும், தரைத்தளத்தில் சொத்தின் உரிமையாளர் ஆகிய என் தாயார் குடியிருந்து வருவதாகவும் குறிப்பிட்டு இருக்கிறார் என்றால் சரிதான். தரைத்தளத்தில் ஒரு சிறிய பகுதியில் என் தாத்தா அலுவலகம் வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த சிறிய அலுவலகத்தை என் தாத்தா இறந்த பிறகு என் அப்பா பூட்டை உடைத்து அனுபவம் எடுத்துவிட்டார் என்றால் தவறு ஆகும். என் தாத்தா காலத்தில் இருந்து என் அப்பாவும் சேர்ந்து தான் அந்த இடத்தில் அலுவலகம் நடத்தி வந்தார். நான் சொல்வது போல் என் தாத்தாவுடன் சேர்ந்து என் அப்பா எந்த ஒரு வியாபாரமும் செய்யவில்லை என்றால் தவறு ஆகும். வா.சா.ஆ.3 ஆகிய அந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை சங்கதிகளில் என் தகப்பனார் தரைத்தளத்தில் உள்ள ஒரு சிறிய பகுதிக்கு தன் தாயாருக்கு வாடகை செலுத்தி அனுபவம் செய்து வந்ததாக குறிப்பிட்டு இருக்கிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் உள்ள என் தகப்பனார் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தில் தாவாச் சொத்திற்கு மேற்கே வாதியின் சொத்து

என்று கூறியிருக்கிறார். தாவாச் சொத்திற்கு செல்வதற்கு ஏ, பி என்று குறிப்பிட்டுள்ள பாதையை தவிர வேறு எந்த பாதையும் அந்த வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் பாதை இருக்கிறது. நான் சொல்வதுபோல் பாதை இருந்திருந்தால் என் தகப்பனார் வரைபடத்தில் குறிப்பிட்டிருப்பார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தாவாச் சொத்து என் தாயாருக்கு சொந்தமான சொத்து என்று நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டு வழக்குரை தாக்கல் செய்த பிறகு அதை மறுத்து என் தகப்பனாரோ, நானோ கட்சி செய்ய முடியாது என்று சொன்னால் தவறு ஆகும். என் தகப்பனார் அசல் வழக்கு எண்.371/2023 என தற்போது இருக்கக்கூடிய வழக்கை மனை எண்.13 ல் ஒரு பகுதியை பொறுத்து மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் வழக்குரைச் சொத்து எங்களுக்குப் பாத்தியம் என்று கட்சி செய்கிறேன் என்றால் தாத்தா வாங்கிய சொத்து ஆகும். என் தாத்தாவின் வருமானத்தைக் கொண்டு சொத்து வாங்கப்பட்டது என்று கட்சி செய்கிறேன். எனது பாட்டிக்கு வருமானமும் கிடையாது. படிப்பறிவும் கிடையாது. என் தாத்தா தான் பணம் கொடுத்தார் என்பதை காண்பிப்பதற்கு என் கைவசம் ஆதாரம் இருக்கிறதா என்றால் உள்ளது. என் தாத்தா உயிருடன் இருந்த காலம் வரை மனை எண் 12 மற்றும் 13 தன்னுடைய சொந்த வருமானத்தைக் கொண்டுதான் வாங்கப்பட்டது என்றும் அதை என் பாட்டி பெயருக்கு வாங்கியதாக ஏதாவது ஒரு வழக்கு தொடுத்து நடவடிக்கை எடுத்தாரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் பாட்டியின் கிரைய பத்திரத்தில் அவர்தான் கிரைய தொகை செலுத்தி

Approved

கிரயம் பெற்றதாக வாசகம் இருக்கும்போது அதற்கு மாறுபாடாக நான் சாட்சியம் அளிக்க உரிமை கிடையாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆனது 2003 ஆம் வருடத்திற்கு உரியது ஆகும். பி.வா.சா.ஆ.2 ஆனது எனது தகப்பனாரால் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனது பாட்டி மனை எண் 12 ஐ பொறுத்து 1976 ஆம் வருடம் இந்த வழக்கின் வாதி பிரின்சி மார்டின் அவர்களுக்கு ஒரு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றும், அதன் பின்னர் அந்த சொத்தை அடைவதற்கு பாதை உரிமையாக மனை எண்.13 வடபகுதியில் ஒரு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் என் அப்பாவிற்கு தெரியாமல் அதை மறைத்து எழுதி கொடுத்து இருக்கிறார். மனை எண் 13 முழுமையாக 2014 ஆம் வருடம் வாதிக்கு என் பாட்டி தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்து இருக்கிறார் என்றால் அதற்கு முன்பாகவே வழக்கு போடப்பட்டு உள்ளது. வழக்கு போடப்பட்ட பிறகு அவ்வாறு என் பாட்டி தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்து இருக்கிறார். எனக்கு திருமணம் நடைபெற்று விட்டது. என் மனைவி மேற்படிப்புக்காக கோயம்புத்தூரில் இருக்கிறார். தாவாச் சொத்திற்கு என் மனைவி எந்த காலத்திலும் வந்தது கிடையாது என்றால் திருமணம் நடைபெற்ற பிறகு அங்கு தான் வசித்து வந்தோம். 2020 ஆம் வருடத்தில் இருந்து என் மனைவி வந்து இருக்கிறாரா என்றால் வந்திருக்கிறார். என் மனைவி எந்த கல்லூரியில் மேற்படிப்பு படிக்கிறார் என்பதை என்னால் கூற இயலுமா என்றால் அது வழக்கிற்கு தேவையற்றது ஆகும். எனது திருமணத்திற்கும், எனது சகோதரியின் திருமணத்திற்கும் எங்கள்

Web Copy

பாட்டிக்கு அழைப்பு கொடுக்கவில்லை என்றால் தவறு ஆகும். என் தகப்பனார் மது அருந்திவிட்டு என் பாட்டியிடம் தகராறு செய்து வந்தும், வாடகைதாரர்களிடம் நேரடியாக சென்று வாடகை வாங்கியும் வந்தார் என்றால் அது தவறு ஆகும். தற்போது தரைத்தளத்தில் என் அத்தை இருந்த பகுதியில் அரப்ஷா என்ற நபரை வாடகைக்கு குடியிருக்க அனுமதித்து இருக்கிறார் என்றால் என் அத்தை குடியிருந்து வருவதாக தான் எனக்கு தெரியும். மனை எண்.12 க்கும், மனை எண்.13 க்கும் செல்வதற்கு ஒரே ஒரு பாதை தான் இருக்கிறது என்றால் தவறாகும். மூன்று பாதைகள் இருக்கிறது. நான் சொல்வது போல் மூன்று பாதைகள் கிடையாது என்றும், ஒரே பாதை என்பது என் தகப்பனார் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள ஏ, பி என்ற பகுதிதான் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்த ஜே வி ஏ நாதன் நல்ல நிலையில் சுய நினைவோடு இல்லை என்பதை என் தகப்பனார் தாக்கல் செய்த முந்தைய வழக்குகளிலோ அல்லது வழக்குரை சங்கதியில் குறிப்பிடவில்லை என்றும் தற்போது முற்றிலும் புதிய சங்கதியை குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த சத்யபிரமான வாக்குமூலத்தில் முதல் தளத்தில் குடியிருந்து வருவதாக தான் குறிப்பிட்டு இருக்கிறேன் என்றும் தரைத்தளத்தில் குடியிருந்து வருவதாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னால் என் அத்தை இருப்பதால் அவ்வாறு சொல்லவில்லை. நான் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு கடிதம் கொண்டு வருபவரோ அல்லது வேறு நபர்களோ வர முடியும் என்றால் சரிதான். அந்த

முகவரியை தான் சொத்து விவரத்தில் இந்த வழக்கின் வாதியும் குறிப்பிட்டு இருக்கிறார் என்றால் முகவரி பொதுவானது ஆகும். சொத்தை அடையாளம் காண்பதில் எந்தவித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். எனது திருமணத்திற்கும் என் சகோதரியின் திருமணத்திற்கும் எனது பாட்டிக்கு சொத்தை கொடுக்காத காரணத்தினால் பத்திரிக்கை வைக்காமல் அழைக்காமல் அவரை புறம் தள்ளினோம் என்றால் சரியல்ல. என் பாட்டியை நானோ அல்லது என் அப்பாவோ எந்த காலத்திலும் அன்பாகவும் பாசத்துடனும் பார்த்து பராமரித்தது கிடையாது என்றும் இந்த வழக்கின் வாதி தான் அவரை அன்புடனும் பாசத்துடனும் பார்த்து பராமரித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. என் பாட்டிக்கு நான் உதவிகள் செய்தேனா என்றால் உதவி செய்திருக்கிறேன். என் பாட்டியை அவ்வப்போது பார்த்தும் இருக்கிறேன். என் பாட்டி உயிருடன் இருந்த வரை என் அப்பாவும் நாங்களும் அவரை பார்த்தது கிடையாது என்றும், அவரை வாதி தான் பார்த்து வந்தார் என்றால் தவறு ஆகும். என் பாட்டி இறந்த போது நானும் என் தாயாரும் கலந்து கொள்ளவில்லை என்றால் தவறு. அவர் இறந்தபோது கீழே தான் வைத்திருந்தார்கள். நாங்கள் இருவரும் சென்றோம். கல்லறை தோட்டத்திற்கும் சென்றேன். நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி பத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும் எதிர் வழக்குரையில் சொல்லப்படாத முற்றிலும் புதிய சங்கதிகள் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து இருக்கிறார். என் தகப்பனார் தாக்கல் செய்த வழக்கில் செட்டில்மெண்ட்

**ஆவணங்கள் செல்லத்தக்கதில்லை என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பாட்டியின் சொத்தில் ஒரு பகுதியை பொறுத்து மட்டும் உரிமையை விட்டுக் கொடுத்துவிட்டு மீதி பாகத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்பதற்கு எனக்கும் என் தகப்பனாருக்கும் அருகதை கிடையாது என்றால் சரியல்ல.**

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படகிறது.)

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.